DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | விஜயகுமார் |
| Father / Husband Name | சந்திரன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.10.2025

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் தான் இந்த வழக்கில் புகார் கொடுத்தேன், யாருக்காக கொடுத்தேன் என்றால் என் அப்பா சந்தரனுக்காக கொடுத்தேன். என்ன பிரச்சணைக்காக கொடுத்தேன் என்றால் ஊரில் சண்டை எதிரிகள் வழியில் முள்ளை போட்டுவிட்டார்கள், அப்போது நானும் என் அப்பாவும் எடுக்க வந்தோம். அப்போது எதிரிகள் அடித்துவிட்டார்கள். எங்களுக்கும் எதிரிகளுக்கும் நில பிரச்சணையும் வழி பிரச்சணையும் உள்ளது என்றால் சரிதான். எங்களுக்குள் உள்ள நில பிரச்சணை காரணமாக நான் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதே தேதியில் அதே நேரத்தில் பெண்களை தாக்கியதாக என் அப்பா, ராஜா, முருகன், மாரி, பாண்டியன், வீரராகவன் ஆகியோர்களுக்கு எதிராகவும் குற்ற எண்.449/2018 என்ற முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான், ஆனால் அவர்கள் பெண்களை தாக்கவில்லை. அந்த நேரத்தில் என் அப்பாவும், எங்களுடைய ஆட்களும் எதிரிகளின் வீட்டை அடித்து, டிராக்டரை உடைத்து, பெண்களை தாக்கினார்கள் என்றாலும், அதனால் எதிரிகள் எங்களுக்கு எதிராக புகார் கொடுத்ததால் பதிலுக்கு நாங்கள் அவர்களுக்கு எதிராக பொய் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

2. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எதிரிகள் மீதுதான் நாங்கள் தாக்குதல் நடத்தினோம் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்த நேரம் மாலை சுமார் 4 முதல் 4.30 மணியிருக்கும். என்னுடைய அப்பாவை 4.30–4.45 மணிக்குள் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். எனக்கு 2018ம் ஆண்டு திருமணம் ஆனது, தற்போது சென்னையில் வசிக்கிறேன். திருமணம் ஆகி 6 மாதம் எங்கள் ஊரில் தான் வசித்தோம். நவம்பர், டிசம்பர் காலகட்டத்தில் தான் சென்னைக்கு சென்றோம். நான் சம்பவத்தின்போது சம்பவயிடத்தில் இல்லை என்றால் சரியல்ல, நான் அங்கு தான் இருந்தேன். என் அப்பாவே சம்பவத்தின்போது நான் அங்கு இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் அடிபட்ட நேரம் 3.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

நான் எதிரிகளுக்கு எதிராக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும், அதற்கு நான் தண்டிக்கத்தக்கவர் என்றாலும் சரியல்ல. எதிரிகள் எனக்கு எதிராக நஷ்ட ஈடு கோர முடியும் என்றாலும், இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. சம்பவயிடத்தில் ரவி, கணபதி ஆகியோர் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | சந்திரன் |
| Father / Husband Name | கண்ணப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.10.2025

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் சுமார் 4.00 மணியளவில் நடந்தது. நான் போலிஸ் விசாரணையில் சொன்ன விவரங்களும் தற்போது நீதிமன்றத்தில் அளித்த சாட்சியங்களும் முரண்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், முன்விரோதம் காரணமாக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. முள்வேளி போட்ட இடம் பொதுஇடம் என்றால் சரியல்ல. அந்த இடம் சம்மந்தமாக OS No.3/2021 உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் சொல்வதால் தண்டனைக்குரியவர் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | எல்லப்பன் |
| Father / Husband Name | பொன்னுசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.10.2025

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சந்திரன் என்பவர் என்னுடைய தம்பி. நான் சொல்லும் நேரத்தில் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சந்திரனும் அவரது ஆட்களும் தான் எதிரிகளை தாக்கினார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் அவர்களுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவருக்கு நான் அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | முருகன் |
| Father / Husband Name | சின்னையன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.10.2025

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சந்திரன் என்னுடைய சித்தப்பா. சம்பவம் 4.00 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். நான் சொல்லும் நேரத்தில் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அவர்களை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. சந்திரன் என்னுடைய சித்தப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடம் பொது வழி அல்ல என்றால் சரியல்ல, அது பொது வழி தான். எதிரிகளின் நிலத்தை அபகரிப்பதற்காக தான் நாங்கள் அனைவரும் பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Miscellaneous :

Sessions : PW 6

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | பாண்டியன் |
| Father / Husband Name | கண்ணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.10.2025

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சந்திரன் என்னுடைய தம்பி. நான் சொல்லும் நேரத்தில் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சந்திரன் என்னுடைய தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடம் பொது வழி அல்ல என்றால் சரியல்ல, அது பொது வழி தான். நான் பொய் சாட்சியம் சொல்வதால் தண்டிக்கத்தக்கவர் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Miscellaneous :

Sessions : PW 7

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| Name | ராஜா |
|---|---|
| Father / Husband Name | பொன்னுரங்கம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.10.2025

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சந்திரன் என்னுடைய பெரியப்பா. சந்திரன் என்னுடைய பெரியப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் நேரத்தில் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சந்திரனும் அவரது ஆட்களும் தான் எதிரிகளை தாக்கினார்கள் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Miscellaneous :

Sessions : PW 8

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | ராஜேஷ்வரி |
| Father / Husband Name | பொன்னுரங்கம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.10.2025

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சந்திரன் என்னுடைய மாமா. சந்திரன் என்னுடைய மாமா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் நேரத்தில் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது பாண்டியன், குமார், வீரராகவன், ராஜா, முருகன் ஆகிய அனைவரும் இருந்தார்கள். சந்திரனும் அவரது ஆட்களும் தான் எதிரிகளையும் அவர்கள் வீட்டு பெண்களையும தாக்கினார்கள் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Miscellaneous :

Sessions : PW 9

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | வீரராகவன் |
| Father / Husband Name | பீமன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.10.2025

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சந்திரன் என் பங்காளி. சந்திரன் என்னுடைய தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் நேரத்தில் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சந்திரனும் அவரது ஆட்களும் தான் எதிரிகளையும் அவர்கள் வீட்டு பெண்களையும் தாக்கினார்கள் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றாலும் சரியல்ல. அதே நாளில் எங்களுக்கு எதிராக குற்ற எண்.449/2018 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு எதிரான வழக்கு தான் உண்மையான வழக்கு என்றாலும், இது பொய் வழக்கு என்றாலும் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிப்பதால் நான் தண்டனைக்குரியவர் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025
Miscellaneous :
Sessions : PW 10
Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | பிரபு |
| Father / Husband Name | கோவிந்தன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.10.2025

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் சண்டையை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சண்டை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் வந்து விசாரித்து சாட்சி கையொப்பம் கேட்டார்கள் போட்டேன். அதில் என்ன விவரம் இருந்தது என்று படித்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் புகார்தாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Miscellaneous :

Sessions : PW 11

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | சங்கர் |
| Father / Husband Name | கோவிந்தன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.10.2025

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் சண்டையை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல, சண்டை என் வீட்டின் அருகே தான் நடந்தது நான் பார்த்தேன். நான் சண்டையை பார்த்ததாக முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன், அதில் சண்டை நடந்ததை பற்றி எழுதியிருந்தது. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சந்திரனுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றாலும் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிப்பதற்கு தண்டனைக்குரியவர் என்றால் சரியல்ல. எங்கள் கிராமத்தில் பிளான் வழி என்று ஒன்று உள்ளது என்றால் சரிதான். அங்கு ரோடு இல்லை, சம்பவயிடம் தான் சாலை.